முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1078

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.09.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மபலம் கொண்ட ஞானியே
தரணி காத்திடும் மாதவசியே
பெருமைமிக்க அரங்கன் அவதாரத்தை
பேருலகம் அறியவேண்டி ஆறுமுகன் யான்
2. யானும் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
**(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 26 நாள், 11.09.2022** ஞாயிற்றுக்கிழமை**)**
அருளுவேன் சுபகிருது வேங்கை திங்கள் தன்னில்
தன்னிலே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
தவசி அரங்கன் தர்மமே கலியின் சிறந்த தர்மம்
3. மண்ணுலகில் அரங்கன் திருவடி பற்றி
மக்களெல்லாம் முருகா அரங்கா என்று கூறி
கூறியே தொடர்ந்து ஞானம் பயில குறையில்லா அவரவரும் ஞான சித்தி
தெரிவிப்பேன் அறிவு தெளிவு சிந்தையோடு தேசிகனால் தேற்றம் கண்டு ஞானியாவர்
4. ஆகவே அரங்கனுள் யானிருக்க
அணுகிய மக்களுக்கெல்லாம் என் காட்சி
வருமுலகில் தடையற இனிதே காணும்
வரமென அவரவர் விருப்பங்கள் வல்லமைபட நிறைவேறி வெற்றி காணும்
5. காணவே அரங்கன் திருவடி பற்றி
கணக்காய் தீட்சை பெறும் மக்களுக்கு
ஞானமெனும் சித்தி ஈதூழே
இனிதே கீர்த்தியாக மாறும்
6. ஆகவே ஐயமற உலகோர்
அரங்கன் திருவடிபற்றிவர அனைவருக்கும்
ஞானியாகும் வாய்ப்பு கிட்டும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–